Q.C-059

**DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)**

| **Name of the Test:** | Departmental Test for appointment as Assistant Audit Officers in the Audit wing of the Hindu Religious and Charitable Endowments (Admn.) Department - Part - II (a) Accounts and Audit of Hindu Religious Institutions (Theory & Practical) (Without Books) | 130 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## **OBJECTIVE TYPE**

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்।, கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.
2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.
3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.
4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.
5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. As per manual of Accounts what is the Form No. of cash book?
கணக்கு கையேடு(Manual of Accounts) ன் படி ரொக்க குறிப்பு பதிவேடு படிவம் எண்?

(A) Form No. 3
படிவம் எண். 3

(B) Form No. 1
படிவம் எண். 1

(C) Form No. 4
படிவம் எண். 4

(D) Form No. 5
படிவம் எண். 5

2. The cheque Book and Pass Book of the 1st Account shall be in the custody of under which one of the following?
முதல் கணக்கின் காசோலைகள் மற்றும் பாஸ் புத்தகங்கள் பின்வருவனவற்றுள் யாருடைய பொறுப்பில் இருக்க வேண்டும்?

(A) Executive Officer
செயல் அலுவலர்

(B) Chairman board of trustees
அறங்காவலர் குழுத் தலைவர்

(C) Trustee
அறங்காவலர்

(D) Accountant of the Temple
திருக்கோயிலின் கணக்கர்

3. If a religious institution assessable income of Rs.1 lakhs to 2 lakhs what is the amount deducted towards oru kala pooja?
ஒரு அறநிறுவனத்தின் வருவாய் ரூ. 1 இலட்சம் முதல் 2 இலட்சம் வரை இருப்பின் ஒரு கால பூஜைக்காக கழிக்க வேண்டிய தொகை

(A) Rs. 2,000
ரூ. 2,000

(B) Rs. 5,000
ரூ. 5,000

(C) Rs. 7,500
ரூ. 7,500

(D) Rs. 10,000
ரூ. 10,000

4. If a religious institution's annual assemble income is above 3 lakhs means who is the audit reviewing authority of the draft audit report?
ஒரு அறநிறுவனத்தின் ஆண்டு நிகர வரிவிதிப்பு வருமானம் ரூ. 3 இலட்சத்திற்கு மேல் உள்ளதென்றால் அந்நிறுவனத்தின் வரைவு தணிக்கை மீதான மேலாய்வு மேற்கொள்ளும் நபர்

(A) Audit Superintendent
தணிக்கை ஆய்வர்

(B) Assistant Audit Officer
உதவி தணிக்கை அலுவலர்

(C) Audit Inspector
தணிக்கை கண்காணிப்பாளர்

(D) Regional Audit Officer
மண்டல தணிக்கை அலுவலர்

5. Non senior grade temple having income of more than 10 lakhs and included in the list under section 46 of the Act, then the audit report is sent to whom?
ரூ. 10 இலட்சத்திற்கு மேல் வருமானம் பெறும் திருக்கோயில்கள் மற்றும் முதுநிலை அல்லாத சட்டப்பிரிவு 46 ன் கீழ் பட்டியலை சார்ந்த திருக்கோயில்களின் தணிக்கை அறிக்கையினை யாருக்கு அனுப்ப வேண்டும்

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Commissioner
ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Additional Commissioner
கூடுதல் ஆணையர்

6. Receipts and charges of a Religious institution and other accounts should be maintained in the form prescribed by the commissioner should be maintained properly by trustees annually in which section?
அறநிறுவனங்களின் வரவு/செலவு மற்றும் இதர கணக்குகள் அறங்காவலரால், ஆணையர் குறிப்பிடும் படிவத்தில் பேணப்பட்டு முறையான கணக்குகள் ஆண்டுதோறும் பராமரித்து வர வேண்டும் என குறிப்பிடும் சட்டப்பிரிவு

(A) 87(1)
(B) 87(2)
(C) 87(3)
(D) 87(4)

7. While commencing audit of a religious institution under which one of the following should be verified and certificate should be given on that day?
ஒரு அறநிறுவனத்தின் தணிக்கையினை துவக்கும் நாளன்று கீழ்கண்ட எவற்றினை அந்நாளில் சரி பார்த்து சான்றளிக்க வேண்டும்

(A) Cash balance on commencing date of Audit
ரொக்க கையிருப்பு தணிக்கை நாளன்று

(B) Form 22,23,24 on commencing date of Audit
படிவம் 22,23,24 தணிக்கை நாளன்று

(C) Postal stamp account on that day
அஞ்சல் வில்லை கணக்கு தணிக்கை நாளன்று

(D) All the above
மேற்கண்ட அனைத்தும்

8. What is the assessable income % percentage of a Religious Institution which is having an annual income of Rs. 5 lakhs and above?
ரூ. 5 இலட்சத்திற்கு மேல் வருமானம் பெறும் ஒரு அறநிறுவனத்தின் உதவித்தொகை நிர்ணயம் கணக்கிடும் சதவீதம் எவ்வளவு

(A) 4%
(B) 5%
(C) 7%
(D) 12%

9. Joint Commissioner/Executive Officer level senior grade temple's Audit report is approved by whom?
இணை ஆணையர் / செயல் அலுவலர் நிலையிலான அற நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கும் அலுவலர்

(A) Assisstant Audit officer
உதவி தணிக்கை அலுவலர்

(B) Deputy chief audit officer/Regional Audit Officer
துணை தணிக்கை அலுவலர்/மண்டல தணிக்கை அலுவலர்

(C) Chief Audit Officer
தலைமை தணிக்கை அலுவலர்

(D) Director
இயக்குநர்

10. The meetings of Thiruppani committee shall be convened atleast in under which one of the following intervals?
திருப்பணி குழுவின் கூட்டம் குறைந்தபட்சம் பின்வருவனவற்றுள் எவ்வளவு கால இடைவெளியில் கூட்டப்பட வேண்டும்

(A) Two months once
இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை

(B) Every month
வாரத்திற்கு ஒருமுறை

(C) Weekly once
ஒவ்வொரு மாதமும்

(D) Every half year
ஒவ்வொரு அரையாண்டும்

11. According to Commissioner Rc. No. 17834/2017/c2 dated 27.02.2019 what is the percentage of amount to the invested in co-operate banks of a religious institution surplus fund?
ஆணையர் அறிக்கை ந.க. எண். 17834/2017/சி2 நாள் 27.02.2019 ன் படி அறநிறுவனங்களின் பொது நிதி முதலீடுகளை கூட்டுறவு வங்கிகளில் முதலீடு செய்யப்பட வேண்டிய சதவீதம் எவ்வளவு

(A) 50%

(B) 25%

(C) 75%

(D) 100%

12. If an Annual Income of a Religious institution is between 2 lakhs to 5 lakhs what is the % of amount payable to department towards contribution?
ரூ. 2,00,000/- முதல் ரூ. 5,00,000 வரை நிகர வருமானம் உள்ள ஒரு அறநிறுவனத்தின் சகாயத்தொகை எத்தனை சதவீதம் துறைக்கு செலுத்த வேண்டும்

(A) 4%

(B) 5%

(C) 6%

(D) 7%

13. Who has the power to write off the amount above Rs. 10,000/-?
ரூ. 10,000/-க்கு மேல் போக்கெழுதும் அதிகாரம் பெற்ற அலுவலர்

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Commissioner
ஆணையர்

(D) Government
அரசு

14. In a Religious institution during a festival how many days should a employee will work (or duty) for getting special bonus?
திருக்கோயில்களின் திருவிழாவின் போது ஒரு ஆண்டில் எத்தனை நாட்களுக்கு மேல் திருவிழா சிறப்பு பணி மேற்கொண்டால் ஒரு மாத அடிப்படை சம்பளம் வழங்கலாம்.

(A) 30 days
30 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 90 days
90 நாட்கள்

(D) 12 days
12 நாட்கள்

15. In a Religious institution where the foreign employees are working whether they are eligible for special Bonus?
அறநிறுவனங்களில் பணிபுரியும் அயல்பணி பணியாளர்களுக்கு திருவிழா சிறப்பூதியம் வழங்கலாமா?

(A) Yes
ஆம்

(B) No
இல்லை

(C) According to Rules
விதிகளுக்குட்பட்டு

(D) None of the above
மேற்கண்ட எதுமில்லை

16. What is the percentage of centage charge to be paid to department on approved estimate of work?
அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் கண்டவாறு எத்தனை சதவீதம் பரிசீலனை கட்டணம் துறைக்கு செலுத்த வேண்டும்?

(A) 5%

(B) 3%

(C) 1%

(D) 4%

17. Under which one of the following tariff should be levied for electricity charges for a religious institution or Temple?
அறநிறுவனம்/திருக்கோயில்களுக்கு மின் கட்டணம் வீதத்தின் அடிப்படையில் விதிக்கப்பட வேண்டும்?

(A) II A
(B) II B
(C) II C
(D) II D

18. Content of Audit Reports shall specify
தணிக்கை அறிக்கையில் உள்ளடக்கியது

(A) Irregular or illegal or improper expenditure
ஒழுங்கற்ற சட்டவிரோதமான முறையற்ற செலவினங்கள்
(B) Failure to recover money due to temple
வரவேண்டிய வசூலிக்கத்தக்க பணத்தினை வசூலிக்க தவறியது
(C) Loss or waste of money or misconduct or misapplication or fraudulent transaction of breach of trust on the part of trustee
இழப்பு அல்லது பண வீண் செலவு அல்லது தவறான நடத்தை அல்லது தவறான உபயோகம் அல்லது நம்பிக்கை துரோகம்
(D) All of the above
இவையாவும்

19. According to HR & CE Act a fit person may be appointed by which section?
அறநிலையச் சட்டப்பிரிவுகளின்படி மொத்தம் எத்தனை பிரிவுகளின் மூலம் தக்கார் நியமனம் செய்யலாம்?

(A) Section 57
பிரிவு 57
(B) Section 49
பிரிவு 49
(C) Section 53
பிரிவு 53
(D) Section 27
பிரிவு 27

20. A Temple Servant who is working in a religious institution or who is getting emolument or perquisite from the temple may suspended or dismissed under which section of the Act?
ஒரு அறநிறுவனத்தை சேர்ந்த அல்லது அதிலிருந்து பதிவி ஊதியம் அல்லது இடை ஆதாயம் பெறுகின்ற பணியாளர் ஒருவரை எந்த சட்டப்பிரிவின் கீழ் இடைநீக்கம் அல்லது நிரந்தர பணிநீக்கம் செய்யலாம்?

(A) 56(2)
(B) 56(3)
(C) 56(1)
(D) 56(4)

21. Property Register of Religious Institution has to be revised once in every ___________ years.
அறநிறுவனங்களின் சொத்துப்பதிவேடு எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்

(A) One year
ஒரு வருடம்

(B) Three years
மூன்று வருடங்கள்

(C) Five years
ஐந்து வருடங்கள்

(D) Ten years
பத்து வருடங்கள்

22. Under which section of HR&CE act 1959 Hindu Religious and Charitable Endowments Common Good fund is created?
1959ம் வருடம் இந்துசமய அறநிலையத்துறையின் எந்த சட்டப்பிரிவின் கீழ் இந்து சமயம் மற்றும் அறக்கட்டளைகள் பொது நிதி ஏற்படுத்தப்பட்டது?

(A) Section 97
பிரிவு 97

(B) Section 85
பிரிவு 85

(C) Section 62
பிரிவு 62

(D) Section 58
பிரிவு 58

23. Which of the following register is listed in 1-15 register?
பின்வரும் பதிவேடுகளில் 1 முதல் 15 வரையுள்ள பதிவேட்டின் பட்டியலில் உள்ளது எது?

(1) Register of Thittam
திட்டப்பதிவேடு

(2) Register of Trees
மரங்கள் பதிவேடு

(3) Register of Kattalai
கட்டளை பதிவேடு

(4) Service Inam Land
ஊழிய மானிய நிலங்கள்

(A) 1, 2, 3

(B) 2, 3, 4

(C) 3, 4, 1

(D) 4, 1, 2

24. What is the form number of Auction Register as per manual of Accounts?
கணக்கு கையேட்டின் படி ஏலப்பதிவேட்டிற்கான படிவம் எண்

(A) 22

(B) 21

(C) 9

(D) 24

25. Deviation of approved estimates not to exceed
அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டிலிருந்து பணிமாறுபாடு நிகழும் போது எவ்வளவு சதவீதம் பணி மாறுபாடு அனுமதிக்கலாம்

(A) Above 5%
5%க்கு மேல்

(B) 10%
10%

(C) No sanction for deviation required
மாறுபாட்டிற்கு அனுமதி தேவையில்லை

(D) All deviation should be got appropriate authorities
எல்லா பணி மாறுபாட்டிற்கும் உரிய அலுவலரின் அனுமதி தேவை

26. Earnest Money Deposit to be deposited while bidding a tender
பணிக்கு டெண்டர் வரவேற்கும் போது முன் பொறுப்புறுதி வைப்புத்தொகை மொத்த பணியில் எத்தனை சதவீதம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(A) 10%
(B) 5%
(C) $2\frac{1}{2}$%
(D) 1%

27. What is the percentage of Security Deposit and withheld amount to be deposited while bidding a tender?
பணிக்கு டெண்டர் வரவேற்கும் போது பினைவைப்புத்தொகை மற்றும் நிறுத்தி வைக்கப்படும் தொகை எவ்வளவு சதவீதம்

(A) 5% and 10%
5% மற்றும் 10%

(B) 15% and 20%
15% மற்றும் 20%

(C) 2½% and 5%
2½% மற்றும் 5%

(D) 1% and 2%
1% மற்றும் 2%

28. As per manual of Accounts para No. ______________ all payments shall be paid by cheque only.
சமய அறநிறுவனங்களுக்கான கணக்கு கையேட்டின் பத்தி எண் ______________ ன் படி அனைத்து செலவினங்களும் காசோலைகளாக வழங்கப்பட வேண்டும்.

(A) 242
(B) 2
(C) 300
(D) 15

29. As per G.O. no. 114 Tourism Endowment and Religious Endowments department date 03.09.2020, temple employee while retiring from his service how many days can surrender Earned leave at his credit?
அரசாணை எண் 114 சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலைய (அநி 4-1) துறை நாள் 03.09.2020 படி அறநிலைய பணியாளர் ஓய்வு பெறும் போது அவரது ஈட்டிய விடுப்பு கணக்கிலிருந்து எத்தனை நாட்கள் ஒப்படைப்பு செய்து அதற்குரிய ஊதியம் மற்றும் இதர படிகள் பெற்று வழங்கலாம்

(A) 180 days
180 நாட்கள்

(B) 210 days
210 நாட்கள்

(C) 240 days
240 நாட்கள்

(D) 230 days
230 நாட்கள்

30. As per G.O no. 253 Tamil Culture Development and RI Department dated 7.10.2016 what is the amount of pension to the permanent temple employee?
அரசாணை நிலை எண். 253 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 7.10.2016 ன் படி நிரந்தர பணியாளர்களின் ஓய்வூதியத் தொகை எவ்வளவு?

(A) Rs. 1000
ரூ.1000

(B) Rs. 500
ரூ. 500

(C) Rs. 750
ரூ. 750

(D) Rs. 2000
ரூ. 2000

31. What is the % of Amount contributed to Employee Provident Fund by temple every month?
பணியாளர் சேமநலநிதி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் திருக்கோயிலால் செலுத்தப்படும் சேமநலநிதி பங்குத் தொகை %?

(A) 10%

(B) 8%

(C) 12%

(D) 14%

32. According to HR & CE Act 1959 section 64 Joint Commissioner has power to
சட்டப்பிரிவு 64–ன் கீழ் இணை ஆணையருக்கு வழங்கப்பட்ட அதிகாரம்?

(A) Joint Commisioner has power to form Scheme suo motta
நிர்வாகத் திட்டத்தை சுயமாக ஏற்படுத்தலாம்

(B) Modified the scheme already in force
ஏற்கனவே இருந்து வரும் நிர்வாக திட்டத்தை மாற்றியமைக்கலாம்

(C) Modify or cancel the scheme fixed by High Court
உயர்நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தை மாற்றியமைக்கோ (அல்லது) நீக்கம் செய்து உத்தரவு புதுப்பிக்கலாம்

(D) All the above
இவை அனைத்தும்

33. In case Math and specific endowment attached to mutt, the trustee and mutt shall submit the probable receipts and expenditure of the institution every year to whom?
மடங்கள் மற்றும் அதனைச் சார்ந்த கட்டளைக்களுக்கான வருடாந்திர வரவு செலவு கணக்குகள் ஒவ்வொரு வருடமும் மடாதிபதி யாருக்கு அனுப்ப வேண்டும்?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Commissioner
ஆணையர்

(C) Additional Commissioner
உதவி ஆணையர்

(D) Deputy Commissioner
துணை ஆணையர்

34. A religious institution not included in the list published under section 46, the audit report of which is submitted to whom?
சட்டப்பிரிவு 46–ன் கீழ் விளம்புகை செய்யப்படாத ஒரு அறநிறுவனத்தின் தணிக்கை அறிக்கை யாருக்கு அனுப்பப்பட வேண்டும்

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Commissioner
ஆணையர்

(D) Deputy Commissioner
துணை ஆணையர்

35. A Religious institution having an annual assessable income of Rs. 5,00,000/- and above then the review and approval of draft Audit report of the institution is done by
ரூ. 5,00,000/- க்கு மேல் திருக்கோயிலின் ஆண்டு வருமானம் இருப்பின் இத்திருக்கோயிலின் வரைவு தணிக்கை மீதான மேலாய்வு மேற்கொள்ளும் நபர் (மற்றும்) ஒப்புதல் வழங்கும் அலுவலர்

(A) Assistant Audit Officer
உதவி தணிக்கை அலுவலர்

(B) Regional Audit Officer/Deputy Chief Audit Officer
மண்டல தணிக்கை அலுவலர்/துணை தலைமை தணிக்கை அலுவலர்

(C) Chief Audit Officer
தலைமை தணிக்கை அலுவலர்

(D) Director
இயக்குநர்

36. Under which section of HR & CE, Act 1959, the Commissioner may call for records to pass orders
1959–ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறையில் எந்த சட்டப் பிரிவின் கீழ் ஆணையர் சமய நிறுவனங்களின் பதிவுக் கட்டுக்களை தருவித்து ஆணைகள் பிறப்பிக்கலாம்.

(A) 81 (B) 111
(C) 101 (D) 21

37. Under which section of HR & CE Act 1959 hereditary trustee can be placed under suspension and removed or dismissed from the post?
1959 ஆம்ஆண்டு இந்து சமய அறநிலையத்துறையின் எந்த சட்டப்பிரிவின் கீழ் பரம்பரை அறங்காவலர் பணியிடை நீக்கம் அல்லது பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது ?

(A) 86 (B) 32
(C) 47 (D) 53

38. Receipt of Thulabaram should be recorded in the miscellaneous receipts in form no.
துலாபாரம் மூலம் கிடைக்கும் காணிக்கை இனங்கள் படிவம் எண் __________ ல் உள்ள பலவகை ரசீதுகளின் மூலம் வரவு வைக்கப்பட வேண்டும்.

(A) 5 (B) 28
(C) 81 (D) 74

39. If the closing balance of the loan recoverable and with the positive figure in the abstract of audit accounts it means
தணிக்கையான கணக்குகளின் வரவு செலவு சுருக்கப் பட்டியலில் வசூலிக்கப்பட வேண்டிய கடன் நேர்மறையான (Positive Figure) எண்ணிக்கையில் முடிவடைந்தால் அதன் பொருள்?

(A) Excess collection
மிகையாக வசூலிக்கப்பட்டுள்ளது

(B) Short collection
குறைவாக வசூலிக்கப்பட்டுள்ளது

(C) Correct collection
சரியாக வசூலிக்கப்பட்டுள்ளது

(D) Partial collection
பாதித்தொகை வசூலிக்கப்பட்டுள்ளது

40. Permanent Articles other than jewels and other valuable belonging to Religious institution shall be recorded in a register as per form no.
நகைகள் நீங்கலாக கொள்முதல் செய்யப்பட்ட காணிக்கையாக பெறப்பட்ட நிரந்தர பொருட்கள் விபரங்கள் படிவம் எண் __________ ல் பதியப்பட வேண்டும்.

(A) 33

(B) 75

(C) 25

(D) 101

41. In Senior grade temples, pending audit para should be settled by first level audit committee which includes the following persons?
முதுநிலை திருக்கோயில்களின் தணிக்கை அறிக்கையில் நிலுவையிலுள்ள பத்திகள் தீர்வு செய்ய முதல்நிலை தணிக்கை குழுவில் அமைப்பில் இடம் பெறும் நபர்

(A) Commissioner
ஆணையர்

(B) Joint Secretary to the Government Finance department
அரசு இணை செயலாளர், நிதி துறை

(C) Director
இயக்குநர்

(D) All of the above
அனைவரும்

42. If the General head begins, and ends with negative figure in the abstract of audited accounts the financial position of the Religious Institution could be
தணிக்கையான கணக்குகளின் வரவு செலவு சுருக்கப்பட்டியலில் பொதுக்கணக்கு பற்றாக்குறை இருப்பில் துவங்கி பற்றாக்குறை இருப்பில் முடிவடைந்தால் சம்மந்தப்பட்ட சமய நிறுவனத்தின் நிதி நிலை?

(A) Satisfactory
திருப்திகரம்

(B) Fairly Satisfied
சுமாரான திருப்திகரம்

(C) Not Satisfied
திருப்திகரமாய் இல்லை

(D) Fully Satisfied
மிகவும் திருப்திகரமாய் உள்ளது

43. TDS deducted on interest on investment shall be shown as __________ under which lead.
முதலீடு வட்டியில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி பின்வருவனவற்றில் எந்த தலைப்பில் காண்பிக்கப்பட வேண்டும்

(A) Interest on Investment
முதலீடு வட்டி

(B) Savings Bank Interest
சேமிப்பு கணக்கு வட்டி

(C) Miscellaneous
பலவகை

(D) TDS recovered from interest on investment
முதலீடு வட்டியில் வருமான வரி பிடித்தம்

44. As power the para 73 of manual accounts of Religious Institutions. EMD can be collected from which of the following persons?
அறநிறுவனங்களுக்கான கணக்கு நடைமுறை கையேடு பத்தி எண் 73–ன் படி, EMD என்பது யாரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்?

(A) Form the Building tenant
கட்டிடவாடகைதாரர்

(B) From the Leassee
தினக்கூலி பணியாளர்

(C) From the daily wage employee
குத்தகைதாரரிடமிருந்து

(D) From the Bidders
ஏலதாரரிடமிருந்து

45. Receipts of Religious Institutions received by way of cheque, it can be shown in which of the column of the cash book?
காசோலைகள் மூலம் தொகைகள் பெறப்பட்டால் ரொக்க பதிவேட்டில் பின்வருவனவற்றில் எந்த முறையில் காண்பிக்கப்பட வேண்டும்?

(A) Bank Column of Receipt side
வரவு பகுதி வங்கி கலம்

(B) Bank Column of Receipt and charges side of cash book
வரவு பகுதி வங்கி கலம் செலவு பகுதி வங்கி கலம்

(C) Bank Column of the Receipt side and cash column of charges side
வரவு பகுதி வங்கி கலம் மற்றும் செலவு பகுதி ரொக்க கலம்

(D) Cash Column of both sides
செலவு பகுதி, இரண்டு கலமும்

46. If any fund pertaining to a Religious Institutions in Diverted to another Religious Institutions for reasons other than religious purpose without previous sanction of the commissioner. The objection has to be raised as per?
ஒரு சமய நிறுவனத்தின் நிதியானது வேறு ஆலய நிறுவனத்தின் சமய நோக்கமில்லாத காரணங்களுக்காக ஆணையர் முன் அனுமதியின்றி செலவிடப்பட்டிருக்குமாயின் பின்வருவனவற்றில் எந்த பிரிவை குறிப்பிட்டு மறுப்பு எழுப்பப்பட வேண்டும்

(A) Section 86
சட்டப்பிரிவு 86

(B) Section 25
சட்டப்பிரிவு 25

(C) Section 36
சட்டப்பிரிவு 36

(D) Section 73
சட்டப்பிரிவு 73

47. A trustees a Religious Institutions without obtaining the previous sanction of the competent authority melt any jewels and valuables. Objection has to be revised under rule
சமய நிறுவனத்தின் அறங்காவலரால் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் உரிய அலுவலரின் அனுமதி பெறப்படாமல் உருக்கப்பட்ட நேர்வினை பின்வருவனவற்றில் எந்த விதியை கட்டிக்காட்டி மறுப்ப எழுதப்பட வேண்டும்

(A) 42 & 116(2) (XII) 13

(B) 42 & 116(2) (XII) 11

(C) 103 & 116(2) (XI) 6

(D) 116 & (X) 15

48. A servant appointed to a non hereditary post in Religious Institutions shall complete his proabations period within ____________ years.
சமய நிறுவனத்தின் மரபு சாரா பணியிடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் ஒருவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து பின்வருவனவற்றுள் எத்தனை ஆண்டுகளுக்குள் தனது தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்ய வேண்டும்.

(A) 1 year
1 வருடம்

(B) 2 years
2 வருடங்கள்

(C) 1½ year
1½ வருடம்

(D) 1¾ year
1¾ வருடம்

49. Expenditure over approved Dhittam objection has to be revised under scheme
அங்கீகரிக்கப்பட்ட திட்டப்பதிவேட்டில் குறிப்பிட்ட தொகையைவிட மிகையாகச்செலவுகள் மேற்கொள்ளப்பட்ட நேர்வில், பின்வரும் எந்த விதியை குறிப்பிட்டு மறுப்பு எழுப்பப்பட வேண்டும்

(A) Rule 116 (2) (X) (9)
விதி 116 (2) (X) (9)

(B) Rule 116 (2) (V) (3)
விதி 116 (2) (V) (3)

(C) Rule 116 (2) (X) (8)
விதி 116 (2) (X) (8)

(D) Rule 116 (2) (X) (11)
விதி 116 (2) (X) (11)

50. Register of Kanikkais shall be maintained in Form No ____________ as prescribed in Manual of Accounts.
கணக்கு கையேட்டின்படியான காணிக்கைப்பதிவேடு படிவம் எண்

(A) Form No. 20
படிவம் எண். 20

(B) Form No. 22
படிவம் எண். 22

(C) Form No. 25
படிவம் எண். 25

(D) Form No. 46
படிவம் எண். 46

51. Grains stock register of a Religious Institutions has to be maintained as per Form No.
சமய நிறுவனங்களில் தானியங்களுக்கான இருப்பு பதிவேடு பின்வருவனவற்றில் எந்த படிவத்தில் பேணப்பட வேண்டும்

(A) Form No. 38
படிவம் எண். 38

(B) Form No. 27
படிவம் எண். 27

(C) Form No. 43
படிவம் எண். 43

(D) Form No. 35
படிவம் எண். 35

52. Delegation of power of Commissioner to be ordered by whom?
ஆணையரது அதிகாரத்தை பகிர்ந்தளிக்க யாரால் உத்தரவிடப்பட வேண்டும்

(A) State Assembly
சட்டப்பேரவை

(B) Government
அரசு

(C) Commissioner
ஆணையர்

(D) Secretary
செயலாளர்

53. Panel for Appointment of trustees to be prepared by
அறங்காவலர் நியமனத்திற்கான தேர்ந்தோர் பட்டியல் (Panel) தயாரிக்கும் பணி யாரால் மேற்கொள்ளப்பட வேண்டும்

(A) Advisory Committee
ஆலோசனைக்குழு

(B) District Committee
மாவட்டக்குழு

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) Joint Commissioner
இணை ஆணையர்

54. Annual Budget to be prepared and submitted by Trustee by the month of
ஆண்டு வரவு செலவு பட்டியல் அறங்காவலரால் தயாரித்து அனுப்பப்பட வேண்டிய தேதி

(A) 31st March
31st மார்ச்

(B) 30th September
30th செப்டம்பர்

(C) 1st April
1st ஏப்ரல்

(D) 1st July
1st ஜூலை

55. A person dismissed from Central Government or State Government service is eligible for Appointment as Trustee or not
மாநில/மத்திய அரசின் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர் அறங்காவலராக நியமனம் செய்ய தகுதி உடையவரா?

(A) Eligible
ஆம்

(B) Not Eligible
தகுதியில்லை

(C) With approval of Government
அரசின் அனுமதி பெற்று நியமனம் செய்யலாம்

(D) Commissioner may appoint
ஆணையர் அனுமதி பெற்று நியமனம் செய்யலாம்

56. Leave salary of Government Servants in Foreign Service shall be paid by whom?
திருக்கோயில்களில் அயல்பணியில் பணிபுரிவோரின் விடுப்பு சம்பளம் யாரால் வழங்கப்படும்

(A) Temple
திருக்கோயில் நிர்வாகம்

(B) Parent Department
தாய்துறை

(C) Government
அரசால்

(D) No leave salary
விடுப்பு சம்பளம் கொடுக்க இயலாது

57. During the Hundiyal opening proceeds of gold, silver and other valuables shall be recorded in which of the parts of Hundiyal Assortment Register?
உண்டியல் திறப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற பொன் வெள்ளி மற்றும் இதர விலைமதிப்பு இனங்கள் உண்டியல் அசார்ட்மென்ட் பதிவேட்டில், எந்த பகுதியில் பதிவு செய்யப்பட வேண்டும்

(A) Part III
பகுதி III

(B) Part II b
பகுதி II b

(C) Part II
பகுதி II

(D) Part I
பகுதி I

58. A temple servant occupies the building of a Religious institutions then he has to pay a house rent (or) house rent recovery to be deducted in each month salary is
ஒரு சமய நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடத்தினை பயன்படுத்தும் திருக்கோயில் பணியாளரிடமிருந்து ஒவ்வொரு மாதமும் பிடித்தம் செய்ய வேண்டிய வீட்டு வாடகைத் தொகை

(A) Entire amount of H.R.A. + CCA
வீட்டு வாடகைப்படி + நகர ஈட்டுப்படி முழுவதும்

(B) Entire amount of Basic Pay + GP
அடிப்படை ஊதியம் + தர ஊதியம் முழுவதும்

(C) Entire amount of CCA + MA
நகர ஈட்டுப்படி + மருத்துவப்படி முழுவதும்

(D) 4% Basic pay + Entire amount of H.R.A.
அடிப்படை ஊதியத்தில் 4% மற்றும் வீட்டு வாடகைப்படி முழுவதும்

59. If a Religious Institution borrow loan from another Religious Institution under the head of loan to be repayable then the audit objection to be raised under which section and rules of HR & CE Act 1959?
ஒரு அறநிறுவனம் மற்றொரு அறநிறுவனத்திடமிருந்து கடன் பெறும்போது பின்வரும் எந்த சட்டப்பிரிவு மற்றும் விதிகளை குறிப்பிட்டு தணிக்கை மறுப்பு எழுப்பப்பட வேண்டும்

(A) Section 101 and rule no. 116 (2) (X)
சட்டப்பிரிவு 101 விதி எண் 116 (2) (X)

(B) Section 102 and rule no. 116 (2) (IX)
சட்டப்பிரிவு 102 விதி எண் 116 (2) (IX)

(C) Section 103 and rule no. 116 (2) (XI) (7)
சட்டப்பிரிவு 103 விதி எண் 116 (2) (XI) (7)

(D) Section 104 and rule no. 116 (2) (XII)
சட்டப்பிரிவு 104 விதி எண் 116 (2) (XII)

60. Authority competent to write off Rs. 10,000 and above in case of irrecoverable income
அறநிறுவனங்களுக்கு சொந்தமான வருவாயினை திரும்ப வசூலிக்கப்படாத நிலையில் ரூ. 10,000/–க்கு மேல் உள்ள தொகைக்கு ரத்து செய்ய அதிகாரம் உள்ள நபர்

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Commissioner
ஆணையர்

(D) Government
அரசு

61. In the case of Religious Institution whose annual income exceeds 10 lakhs then the statements to be submitted by Religious Institution under section 86, should he sent to
ஒரு அறநிறுவனத்தின் ஆண்டு வருமானம் ரூ. 10 இலட்சத்திற்கு மேலிருப்பின் சட்டப்பிரிவு 86–ன் கீழ் சமர்பிக்கப்பட வேண்டிய பட்டியல்கள் அனுப்பப்பட வேண்டியவர்கள்

(A) Commissioner
ஆணையர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Additional Commissioner
கூடுதல் ஆணையர்

62. The lease of immovable property belonging to Religious institutions shall be liable to be terminated on non payment of lease rent after giving a reasonable opportunity under section
அறநிறுவனத்திற்குச் சொந்தமான அசையாச் சொத்தின் குத்தகை உரிமையை குறிப்பிட்ட காலத்திற்குள் குத்தகை தொகையினை செலுத்த தவறின் எந்த சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்

(A) Section 34(b)
பிரிவு 34(b)

(B) Section 34(a)
பிரிவு 34(a)

(C) Section 34(c)
பிரிவு 34(c)

(D) Section 35
பிரிவு 35

63. Gratuity for the temple staff during their retirement is
திருக்கோயில் பணியாளர் பணி ஓய்வு பெறும் போது பெறும் பணிக்கொடைத் தொகை

(A) Maximum of 15 months salary
அதிகபட்சம் 15 மாத ஊதியம்

(B) Maximum of 10 months salary
அதிகபட்சம் 10 மாத ஊதியம்

(C) Maximum of 20 months salary
அதிகபட்சம் 20 மாத ஊதியம்

(D) Maximum of 30 months salary
அதிகபட்சம் 30 மாத ஊதியம்

64. Leave on Medical Certificate may be granted to temple servant whose period of service more than 15 years to 20 years.
15 வருடம் முதல் 20 வருடம் வரை பணி முடித்த திருக்கோயில் பணியாளர் ஒருவருக்குமருத்துவச் சான்றின் படியான ஈட்டிய விடுப்பு நாட்கள் எவ்வளவு

(A) 60 Days
60 நாட்கள்

(B) 120 Days
120 நாட்கள்

(C) 180 Days
180 நாட்கள்

(D) 240 Days
240 நாட்கள்

65. HR & CE Act 1959 Sec 45 deals with the appointment of ___________
1959 ம் வருடம் இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 45 பின்வருவனவற்றுள் யாருடைய நியமனம் குறித்து கையாள்கிறது?

(A) Auditor
தணிக்கையாளர்

(B) Executive officer
செயல் அலுவலர்

(C) Temple Staff
திருக்கோயில் பணியாளர்

(D) Trustee
அறங்காவலர்

66. As per section 34 lease or mortgage for a term exceeding 5 years should be approved by under which one of the following authority?
சட்டப்பிரிவு 34–ன் படி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட குத்தகை, அடமானம் எந்த அலுவலரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Deputy Commissioner
துணை ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Commissioner
ஆணையர்

67. If the annual income of a Religious institutions exceeds Rupees 2 lakhs then the sum of Rs. ___________ shall be deducted in lieu of pooja expenses.
ஒரு அறநிறுவனத்தின் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மேல் இருப்பின் ___________ தொகை ஒரு கால பூஜைக்காக கழிக்கப்பட வேண்டும்

(A) Rs. 2000
ரூ. 2000

(B) Rs. 3000
ரூ. 3000

(C) Rs. 5000
ரூ. 5000

(D) Rs. 10,000
ரூ. 10,000

68. If a Religious Institutions income is above 50 lakhs then the formation of Thiruppani Committee and its members shall be reported to whom?
ஒரு அறநிறுவனத்தின் வருவாய் ரூ. 50.00 இலட்சத்திற்கு மேல் இருப்பின் திருப்பணிக்குழு மற்றும் உறுப்பினர்களை அமைத்து அதன் அறிக்கையை அனுப்ப வேண்டியது யாருக்கு?

(A) Joint Commissioner
இணை ஆணையர்

(B) Deputy Commissioner
துணை ஆணையர்

(C) Commissioner
ஆணையர்

(D) Government
அரசு

69. Accounts to be maintained in accordance with the manual Account of Hindu Religious Charitable Endowments Department under which one of the following rule?
இந்து சமய அறநிலையத்துறை manual ன்படி கணக்கு பேணப்பட வேண்டும் என்று கீழ்கண்ட எந்த இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) 116 (2) (X) (19)
(B) 116 (2) (X) (1)
(C) 116 (2) (X) (2)
(D) 116 (2) (X) (3)

70. Non Payment of Contribution as per Sec. 92 may be recovered as follows
சட்டப்பிரிவு 92–ன் படி சகாயத்தொகை செலுத்த தவறிய அறங்காவலரிடம் அத்தொகையை வசூலித்திட பின்பற்ற வேண்டிய நடைமுறை

(A) Legal Action
நீதிமன்ற நடவடிக்கை

(B) Recovery as if it were a Revenue Arrear collected by District Collector
நில வருவாய் நிலுவை எவ்வாறு வசூலிக்கப்படுமோ அதே போன்று மாவட்ட ஆட்சியர் மூலமாக

(C) Surcharge Proceedings as per Sec. 90(2)
சட்டப்பிரிவு 90(2)–ன் படி தனிப்பட்ட நடவடிக்கை

(D) Appeal to the Commissioner
ஆணையரிடம் மேல் முறையீடு

71. If a Religious institutions total investment amount is Rs.10,00,000/- then the amount of investment in Government Financial Insitution Lease
ஒரு அரசு நிறுவனத்தின் மொத்த முதலீட்டு தொகை ரூ.10 இலட்சமாக இருப்பின் அரசு நிதி நிறுவனத்தால் முதலீடு செய்யப்படவேண்டிய தொகை

(A) 5,00,000
(B) 3,50,000
(C) 2,50,000
(D) 2,00,000

72. Budget of Mutt and specific Endowments to be submitted to under which one of the following?
மடம் மற்றும் குறிப்பிட்ட நிறுவனத்திற்கான வரவு செலவு திட்டம் பின்வருவனவற்றுள் யாருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்?

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்
(B) Joint Commissioner
இணை ஆணையர்
(C) Commissioner
ஆணையர்
(D) Charted Accountant Officer
பட்டயகணக்காளர்

73. As per Commissioner circular R.C. No. 37748/2007/M3 Dated 10/07/2008 the Tustik amount and Mohini etc. the Government raised the amount ____________ times.
ஆணையர் சுற்றறிக்கை ந.க.எண் 37748/2007/எம்3 நாள் 10.07.2008-ன்படி எத்தனை மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

(A) 8 Times
8 மடங்கு

(B) 10 Times
10 மடங்கு

(C) 7 Times
7 மடங்கு

(D) 5 Times
5 மடங்கு

74. Employee Provident Fund Subscription recovered from the temple employee should be remitted to the employee Provident Fund department every month on or
திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சேமநலநிதி சந்தாத்தொகை திருக்கோயில் பங்குத்தொகையுடன் சேர்த்து ஒவ்வொரு மாதமும் எந்த தேதிக்குள் செலுத்தப்பட வேண்டும்?

(A) Before 10th
10 நாட்கள் முன்னதாக

(B) Before 15th of every month
ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதிக்கு முன்னதாக

(C) Before 5th
5 நாட்கள் முன்னதாக

(D) Before 20th
20 நாட்கள் முன்னதாக

75. Power to make rules under Section 116 is vested with
சட்டப்பிரிவு 116-ன் கீழ் விதிகள் ஏற்படுத்த அதிகாரம் யாருக்கு உள்ளது?

(A) Commissioner
ஆணையர்

(B) Government
அரசு

(C) Legislative Assembly
சட்டப்பேரவை

(D) Joint Commissioner
இணை ஆணையர்

76. If the value of work above 500 lakhs then the advertisement to be made in
ஒரு வேலையின் மதிப்பு 500 இலட்சத்திற்கு மேல் இருப்பின் அது குறித்து விளம்பரம் செய்ய வேண்டியது

(A) One English Daily
ஒரு ஆங்கில நாளிதழ்

(B) Two Tamil Daily
ஒரு தமிழ் நாளிதழ்

(C) One English Daily and One Tamil Daily
ஒரு தமிழ் நாளிதழ் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழ்

(D) One English daily national level and one in tamil state level
தேசிய அளவில் ஒரு ஆங்கில நாளிதழிலும் மாநில அளவில் ஒரு தமிழ் நாளிதழிலும்

77. Deduction to be made in the contract bill
பட்டியலில் பிடித்தம் செய்யப்பட வேண்டியது

(A) Additional SD 10%
கூடுதல் பிணைவைப்புத்தொகை 10%

(B) Income Tax 2%
வருமானவரி 2%

(C) Labour Welfare Fund Tax 1%
தொழிலாளர் நலநிதி 1%

(D) All the above
மேலே உள்ள அனைத்தும்

78. Details needed to prepare estimate
மதிப்பீடு தயாரிப்பதற்கு தேவையான விவரங்கள்

(A) type of construction and detailed measurements
கட்டுமானவகை மற்றும் அளவுகள்

(B) Standard Data
நிலையான விவரக்குறியீடு

(C) Schedule of Rate
மாவட்ட தரப்படுத்தப்பட்ட விலைவிகித அட்டவணை

(D) All the above
மேலே உள்ள அனைத்தும்

79. Matters to be specified in Contract Agreement
பணிக்கான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட வேண்டிய விவரங்கள் பணியின்

(A) Specification and Designs
வேலையின் அளவு மற்றும் அதன் அமைப்பை குறித்து

(B) Detailed Estimate Measurement
விரிவான அளவீட்டு மதிப்பீடு

(C) The time within which the work to be completed
பணிமுடிக்கப்பட வேண்டிய நாள்

(D) All the above
அனைத்தும்

80. Certificate of fitness for structural stability of car Thear which is used for car festival in temple should be obtained from which one of the following authority?
திருக்கோயில் தேர் திருவிழாவிற்கு பயன்படுத்தப்படும் தேரின் கட்டமைப்பு நிலைத்தன்மை குறித்து பின்வரும் அதிகாரிகளில் யாரிடமிருந்து தகுதிச்சான்று பெறப்படவேண்டும்?

(A) Sub-Divisional Officer of Public Works Department
பொதுபணித்துறையின் துணை கோட்ட அலுவலர்

(B) Superintendent of Police
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

(C) District Collector
மாவட்ட ஆட்சித் தலைவர்

(D) Sub-Divisional Officer of Fire Service department
தீயணைப்புத் துறையின் துணை கோட்ட அலுவலர்

81. Under which section of Hindu Religious Charitable Endowments Act 1959, the Dhittam/Scale of Expenditure of the Religious Institution other than mutts and specific endowments attached to mutt shall be approved by the appropriate authorities.
1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவுகளில் எப்பிரிவின் கீழ் மடங்கள் இவற்றுடன் இணைந்துள்ள குறிப்பிட்ட கட்டளைகள் நீங்கலாக உள்ள சமய நிறுவனங்கள் திட்டப்பதிவேட்டிற்கு உரிய அலுவலரால் அங்கீகாரம் வழங்கப்படுகிறது?

(A) 58
சட்டப்பிரிவு 58

(B) 87
சட்டப்பிரிவு 87

(C) 61
சட்டப்பிரிவு 61

(D) 42
சட்டப்பிரிவு 42

82. Repairs alteration, Replacement of antique idols, sculpture, carving, painting should be done with the approval of
திருக்கோயிலுக்குச் சொந்தமான உலோக சிற்பங்கள், ஓவியங்கள் பழுதுபார்க்க/புதியதாக மாற்ற, புனரமைப்பு செய்ய யாரிடம் ஒப்புதல் பெற வேண்டும்?

(A) Government
அரசு

(B) Commissioner
ஆணையர்

(C) Joint Commisioner
இணை ஆணையர்

(D) Additional Commisioner
கூடுதல் ஆணையர்

83. It is noticed in audit that any item of expenditure which in the opinion of the auditor is Prima Facie and extra vagant then which rules should be quoted in audit objection?
அறநிறுவனங்களின் கணக்குகளில் தணிக்கையாளரின் முதன்மையான கருத்துப்படி ஏதாவது ஒரு செலவினம் தேவையற்றதும் மற்றும் அதிகப்படியாகவும் உள்ளது என தணிக்கையில் கண்டறியப்பட்டால் பின்வருவனவற்றுள் எந்த விதியை குறிப்பிட்டு மறுப்பு எழுப்பப்பட வேண்டும்?

(A) 42 & 116(2) (XII) 13

(B) 116 (2) (10) 8

(C) 103 & 116(2) (XI) 6

(D) 116 (2) (16) (5) (1)

84. Under which one of the following section, follow-up actions on the objections raised in audit reports and initiating the surcharge proceedings are carried out?
பின்வருவனவற்றுள் எந்த சட்டப்பிரிவின்படி தணிக்கை அறிக்கையில் எழுப்பப்பட்ட மறுப்புகளின் மீதான தொடர் நடவடிக்கை மற்றும் தண்டத் தொகை நிர்ணயம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது?

(A) 87

(B) 90(2)

(C) 101

(D) 78

85. Under which section of Hindu Religious Charitable Endowments Act 1959, the Joint Commissioner decided whether the trustee holds or held office as a hereditary trustee?
1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை எந்த சட்டப்பிரிவின் கீழ் இணை ஆணையரால் ஒரு அறங்காவலர் பரம்பரை அறங்காவலராக பதவி வகித்து வருகிறார் அல்லது பதவி வகித்தாரா என்று முடிவு செய்யப்படுகிறது?

(A) 62

(B) 63(b)

(C) 64

(D) 65

86. Property Register pertaining to Religious Institution are approved by commissioner under which scheme of Hindu Religious charitable Endowments Act 1959?
1959ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை எந்த சட்டப்பிரிவின் கீழ் சமய நிறுவனங்களின் சொத்துப்பதிவேடு ஆணையரால் அங்கீகரிக்கப்படுகிறது?

(A) 26
(B) 25
(C) 27
(D) 29

87. Every face valuable tickes and Misc receipts should be accounted in?
அச்சடிக்கப்பட்ட அனைத்து கட்டணச் சீட்டுகள் மற்றும் பலவகை ரசீது புத்தகங்களின் எண்ணிக்கை கீழ்கண்ட எந்த பதிவேட்டில் இருப்பு விவரம் காண்பிக்கப்படவேண்டும்?

(A) MDR
பலவகை கேட்பு பதிவேடு

(B) Stock Register
இருப்பு பதிவேடு

(C) Stock Register of Money Valued forms
பண மதிப்புள்ள படிவங்கள் இருப்பு பதிவேடு

(D) Kanikai Register
காணிக்கை பதிவேடு

88. Power to Punish temple servants be arrear as per section 56 of 1959 Hindu Religious Charitable Endowments Act in reacted with
1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 56-ன் படி திருக்கோயில் பணியாளர்களை தண்டிக்கும் தகுதி யாருக்கு உள்ளது?

(A) Executive Officer
செயல் அலுவலர்

(B) Trustee
அறங்காவலர்

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) Commissioner
ஆணையர்

89. To remove the trustees of a religious institution the following is not a reason for legal activities
மடத்தின் அறங்காவலரை நீக்க நீதிமன்ற நடவடிக்கை தொடர பின்வரும் காரணங்கள் ஆதாரமாக அமையாது?

(A) The Trustee being a unsound mind person
அறங்காவலர் மனநலம் அற்றவராக இருந்ததல்

(B) Not professing Hindu Religion
இந்து மதத்தை பின்பற்றுபவராக இல்லாதிருத்தல்

(C) Trying to convert the income of the Mutt into Pathakanika
மடத்தின் வருவாயை பாத காணிக்கையாக மாற்ற முயற்சித்தல்

(D) Lease out lands belonging to mutt to a private person
மடத்தின் நிலப்பகுதியை தனிப்பட்ட முறையில் குத்தகைக்கு விடுதல்

90. Pannai Cultivation of a listed religious institution per section 116(1) under rule 2 to be approved by
சட்டப்பிரிவு 116(1)-ன் கீழ் விதி 2-ன் படி பட்டியலைச்சார்ந்த ஒரு அறநிறுவனத்தின் பண்ணை சாகுபடி செய்ய யாருடைய அனுமதி தேவை?

(A) Trustee
அறங்காவலர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Commissioner
ஆணையர்

91. Permanent advance sanctions to temple servant has to be adjusted as per form No.
சமய நிறுவனத்தின் பணியாளர் ஒருவருக்கு ஒப்பளிப்பு செய்யப்படும் நிலையான முன்பணம் சரிசெய்யப்படும் விவரம் எந்த படிவத்தில் கண்காணிக்கப்படும்?

(A) 82
படிவம் எண் 82

(B) 76
படிவம் எண் 76

(C) 45
படிவம் எண் 45

(D) 33
படிவம் எண் 33

92. Fodder register and cattle's of Religious institutions has to be mentioned as per Form No.
சமய நிறுவனங்களில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கான தீவன இருப்புக்கணக்கு பதிவேடு படிவம் எண்

(A) Form No. 39
படிவம் எண் 39

(B) Form No. 36
படிவம் எண் 36

(C) Form No. 75
படிவம் எண் 75

(D) Form No. 63
படிவம் எண் 63

93. Which of the following posts comes under ulthurai posts?
பின்வரும் பதவிகளில் எது திருக்கோயிலின் உள்துறை பணிப்பிரிவை சார்ந்தது?

(A) Manager
மேலாளர்

(B) Assistant
உதவியாளர்

(C) Thiruvalagu
திருவலகு

(D) Executive Officer
செயல் அலுவலர்

94. In senior Grade Temple what will be the crusied date for preparation of panel for promotion in respect of outdoor servants?
முதுநிலை திருக்கோயில் பணியாளர்களின் பதவி உயர்வுக்கான தகுதி வாய்ந்தோர் பெயர் பட்டியல் (Panel) க்கான குறிப்பிட்ட நாள் (Crusied date)

(A) 1st July every year
ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் முதல் நாள்

(B) 15th March every year
ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 15-ம் நாள்

(C) 9th February every year
ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 9-ம் நாள்

(D) 1st September every year
ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் முதல் நாள்

95. Travelling allowance of temple servant has to be claimed in under which one of the following form?
சமய நிறுவனத்தின் பணியாளர் தனது பயணப்படி பட்டியல் எந்த படிவத்தில் கோர வேண்டும்?

(A) Form No. 79
படிவம் எண் 79

(B) Form No. 35
படிவம் எண் 35

(C) Form No. 20
படிவம் எண் 20

(D) Form No. 60
படிவம் எண் 60

96. A temple servant who has completed 5 years of qualifying service is eligible for __________ days of leave on Medical leave and Casual leave.
5 ஆண்டுகள் பணிமுடித்த திருக்கோயில் பணியாளர் ஒருவர் எத்தனை நாட்கள் மருத்துவ சான்றின் பேரிலான விடுப்பு எடுக்க இயலும்?

(A) 15 Days
15 நாட்கள்

(B) 60 Days
60 நாட்கள்

(C) 120 Days
120 நாட்கள்

(D) 180 Days
180 நாட்கள்

97. The authority to approve dhittam of a Religious institution which is a non listed institution in
பட்டியலை சாராத ஒரு சமய நிறுவனத்தின் திட்டப்பதிவேடு யாரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்?

(A) Assistant Commissioner
உதவி ஆணையர்

(B) Joint Commissioner
இணை ஆணையர்

(C) Commissioner
ஆணையர்

(D) Deputy Commissioner (Jewel)
துணை ஆணையர் (நகைமதிப்பீட்டு வல்லுநர்)

98. Under which section the Hindu Religious Charitable Endowments Act 1959, a trustee and Religious institution should maintain the accounts and produce same ________
ஒரு சமய நிறுவனத்தின் அறங்காவலர் பின்வருவனவற்றில் 1959ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டங்களின் எந்த சட்டப்பிரிவுகளின்படி கணக்குகளை பேணி தணிக்கைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்?

(A) 87
(B) 35
(C) 32
(D) 75

99. Encroachment of site belonging to a Religious institution can be evicted under which section Hindu Religious Charitable Endowments Act 1959.
சமய நிறுவனத்திற்கு சொந்தமான ஆக்கிரமிப்பில் உள்ள மனையினை பின்வரும் எந்த சட்டப்பிரிவு அகற்ற இயலும்?

(A) 78, 79
சட்டப்பிரிவு 78, 79

(B) 35, 36
சட்டப்பிரிவு 35, 36

(C) 41, 42
சட்டப்பிரிவு 41, 42

(D) 86, 87
சட்டப்பிரிவு 86, 87

100. Audit check has to be done whether the following deduction were made in the salary
பணியாளரின் ஊதியத்தில் கீழ்கண்ட விவரப்படி பிடித்தங்கள் செய்யப்பட்டுள்ளதா என தணிக்கையால் சரிபார்க்க வேண்டும்?

(A) EPF
பணியாளர் சேமநலநிதி

(B) FBF
பணியாளர் குடும்பநல நிதி

(C) NHIS
பணியாளர் மருத்துவகாப்பீடு சந்தா

(D) All the above
இவை அனைத்தும்